Judicial Form No.53
(Sec.Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure/
XXV Bharatiya Nagarik Suraksha Sanhita)
In the Court of the Judicial Magistrate No.I, Poonamallee
CC.No.330/2024

Calendar )(
Miscellaneous )( Case No. of 202
Preliminary Register )(
Sessions
Deposition of witness for PW.1 (LW1) Prosecution
Defence
Court

Name :ஜெயபாலாஜி
Name S/O :பாஸ்கர்ராவ்
Village :
Taluk :
Calling :
Religion : இந்தியன்
Age :
எதிரி ஆஜர் :எதிரி 3,6,7 முதல் 9, 11 ஆஜரில் உள்ளார்கள். மற்ற எதிரிகள் ஆஜரில் இல்லை.

solemnly aaffirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969 on the day of 06.03.2026

<u>7ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

7ம் எதிரி ராஜேந்திரன் என்பவரை எனக்கு நேரடியாக தெரியும் என்றால் சரிதான். அவரை எங்களது நிறுவனத்தில் எந்த தேதியில் பணிக்கு சேர்த்தோம் என்றால் 2021ம் வருடம் அவர் பணியில் சேர்ந்தார். தேதி ஞாபகமில்லை. அவர் டிஎன்ஜில் டீம் லீடராக இருந்தார். அவர் கிளைண்டுகளிடம் கோஆர்டினேட் செய்வது, டீம் மேனேஜ் செய்வது போன்ற வேலைகளை செய்து வந்தார். கிளைண்டுகளுக்கு தொடர்பு கொள்வது எங்களது அலுவலக கைபேசியின் மூலம்தான் தொடர்பு கொள்ள வேண்டும். தனிநபரின் கைபேசியில் தொடர்பு கொள்ளமாட்டார்கள் என்றால் சரிதான். 7ம் எதிரி அவரது கைபேசியை உள்ளே எடுத்து செல்வதற்கு அனுமதி இல்லை என்றால் சரிதான். மேனேஜர்கள் மட்டும்தான் கைபேசி வைத்திருக்க முடியும். அவர் தொடர்பு கொள்ளக்கூடிய மின்னஞ்சலும் அலுவலகத்தில் மின்னஞ்சல் மூலமாகதான் தொடர்புகொள்ள முடியும், பர்சனல் மெயில்ஐடி மூலமாக கிளைண்டுகளுக்கு தொடர்பு கொள்ள முடியாது என்றால் சரிதான்.

யாருடைய மின்னஞ்சல் வாயிலாக தகவல் பரிமாற்றம் நடக்கப்படுகிறதோ அதனை செக் செய்வதற்கு ஐடி டீம் உள்ளதா என்றால் உள்ளது. அவர்கள் ரேண்டமாக செக் செய்வார்கள். அந்த டீம் மூலமாக எந்த தேதியில் எதிரியின் மின்னஞ்சலிலிருந்து அவரது மின்னஞ்சலுக்கு மாற்றம் செய்யப்பட்டது என்ற விபரங்களை ஐடி டீம் அறிக்கை தயார் செய்து தாக்கல் செய்துள்ளேனா என்றால் நாங்கள் காவல்

நிலையத்தில் கொடுத்துள்ளோம். எந்த தேதியில் எந்த நேரத்தில் அனுப்பப்பட்டது என்று எனக்கு தற்போது ஞாபகம் உள்ளதா என்றால் இல்லை. ஆனால் ஆவணங்கள் உள்ளது. மின்னஞ்சல் மூலமாக பரிமாற்றங்கள் நடந்தது தொடர்பாக எனக்கு எப்போது தெரியவந்தது என்றால் 29.04.2023 அன்று தெரியவந்தது. 7ம் எதிரி ராஜேந்திரன் என்ன காரணத்திற்காக பணியை விட்டு விலகினார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மார்ச் 2023 ல் அவர் அவருக்கு உடல்நிலை பாதிப்பு உள்ளது என்று காரணம் சொல்லி பணியில் இருந்து விலகியுள்ளார். அவர் கொடுத்த ரிசைக்னேஷன் கடிதத்தை நாங்கள் ஏற்றுக்கொண்டோமா என்றால் இல்லை. ஏன் ஏற்றுக்கொள்ளவில்லை என்றால் அவர் பணியில் இருந்து விலகுவதற்கு முன்னர் நோட்டீஸ் கொடுக்க வேண்டும். அவர் நோட்டீஸ் கொடுக்காததால் அவரது ராஜினாமாவை ஏற்றுக்கொள்ளவில்லை.

20.02.2023 அன்று 7ம் எதிரி நோட்டீஸ் கொடுத்துள்ளார் என்றால் இல்லை. 20.02.2023 அன்று இமெயில் மூலமாக நோட்டீஸ் கொடுத்துள்ளார் என்றால் அது குறித்து தெரியாது. நோட்டீஸ் கொடுத்த பிறகு ஒரு மாத காலம் நோட்டீஸ் பீரியடு பணி செய்வதற்கு அவர் தயாராக இருந்தார் பணியும் செய்து வந்தார் என்றால் சரியல்ல. எந்த தேதியில் ராஜேந்திரன் பணியில் இருந்து நின்றுவிட்டார் என்றால் மார்ச் 2023 ஆகும். தேதி ஞாபகமில்லை. 03.03.2023 அன்று எங்களது எச்ஆர் தினேஷ் எங்களது நிறுவனத்தின் கைபேசியில் போன் செய்து பணிக்கு வரவேண்டாம் என்று தெரிவித்தபின்னர்தான் 7ம் எதிரி பணியில் இருந்து நின்றுவிட்டார் என்றால் சரியல்ல. எங்களது அலுவலகத்தின் போன் எண் 9962086660 என்றால் நான் பார்த்துதான் சொல்ல வேண்டும். இந்த புகாரில் வழக்கு மூலம் உமர் என்பவரின் மின்னஞ்சலுக்கு டேட்டா மாற்றம் செய்யப்பட்டதுதான் என்றால் ஊழியர்கள் அவரவர் சொந்த மின்னஞ்சல்களுக்கு டேட்டா பரிமாற்றம் செய்து கொண்டது தான் வழக்கு.

எங்களது நிறுவனத்திலிந்து 7ம் எதிரி பணியிலிருந்து விலகியபின்னர் எந்த நிறுவனத்தில் வேலைக்கு சேர்ந்தார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 7ம் எதிரி பணியில் இருந்து விலகியபின்னர் அவருக்கு அனுபவ சான்று கொடுத்துள்ளோமா என்றால் அதனை செக் செய்ய வேண்டும். 7ம் எதிரி எங்கள் நிறுவனத்திலிருந்து விலகிய பின்னர் மருத்துவதுறை சான்ற சார்ந்த லெகசி என்கிற மெடிக்கல் பில்லிங் நிறுவனத்தில் பணிக்கு சேர்ந்தார் என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் எனக்கு தெரியாது. எனக்கு லெகசி பில்லிங் நிறுவனத்தை குறித்து தெரியுமா என்றால் தெரியாது. லெகசி பில்லிங் நிறுவனத்திலிருந்து எங்கள் நிறுவனத்திற்கு 7ம் எதிரி தொடர்பாக இமெயில் அனுப்பப்பட்டுள்ளது என்றால் நிறைய ஸ்டாப்களுக்கு பேக்ரவுண்ட் செக் செய்வதற்கு பல இமெயில்கள் வரும், அனைத்தும் எனக்கு தெரிவிக்கப்படாது. அதை செக் செய்ய வேண்டும். லெகசி நிறுவனத்தில் மார்ச் 2023லிருந்து ஜீலை 2023 வரை 7ம் எதிரி பணி செய்து வந்தார் என்றால் அதைக்குறித்து எனக்கு தெரியாது. ஏப்ரல் மாதம் 7ம் எதிரி வேறு பணியில் சேர்ந்தார் என்று நான் சொல்லவில்லை. எங்களது மெயிலிலிருந்து அவரது மெயிலுக்கு மாற்றம் செய்துவிட்டார் என்று தான் நாங்கள் சொன்னோம்.

எனது வாக்குமூலத்தில் 29.04.2023 அன்று 1ம் எதிரியின் நிறுவனத்தில் 7ம் எதிரி பணிபுரிந்ததை நான் பார்த்தேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் நான் அவ்வாறு சொல்லவில்லை. எங்கள் நிறுவனத்தில் போதிய வருமானம் கிடைக்காததால் 7ம் எதிரி எங்கள் நிறுவனத்தை விட்டு விலகினார் என்றாலும் அவரைப்பழிவாங்க வேண்டும் என்று 7ம் எதிரியை இவ்வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. 7ம்

எதிரி அவரது விருப்பத்திற்கு மாறாக சென்றிருந்தால் அவருக்கு நோட்டீஸ் நாங்கள் கொடுத்திருப்போம் என்றால் சரியல்ல. எங்களது நிறுவனத்தின் standard operating procedure 7ம் எதிரி தயார் செய்துள்ளார்என்றால் ஒவ்வொரு கிளைண்டுகளுக்கும் தனித்தனியாக standard operating procedure இருக்கும். யாருடைய standard operating procedure குறித்து கேட்கிறீர்கள் என்று தெரியவில்லை. யுஎஸ்சில் உள்ள மருத்துவர்கள் மற்றும் பேஷண்ட்களின் பட்டியல்கள் குறித்து 7ம் எதிரிக்கு தெரிய வாய்ப்பில்லை என்றால் கிளைண்ட் பற்றிய விபரங்கள் 7ம் எதிரிக்கு தெரியும். பேசியண்ட் பற்றி தெரியாது. 4 மற்றும் 5 எதிரிகள் அமெரிக்காவில் உள்ள மருத்துவர்கள் என்பதால் அவர்களுக்கு மருத்துவர்களைக்குறித்தும் கிளைண்ட்டுகளைக்குறித்தும் விபரங்கள் தெரிந்திருக்கும் என்றால் அவர்களுக்கு தெரியாது. நாங்கள் 4 மற்றும் 5 எதிரிகளுக்கு சேவை செய்துள்ளோம் என்றால் சரிதான். எங்கள் சேவை குறைபாடு காரணமாக எங்களுடன் வைத்திருந்த ஒப்பந்தங்களை துண்டித்து விட்டார்கள் என்றால் சரியல்ல. அவ்வாறு இருந்திருந்தால் எங்களது ஸ்டாப்களை எடுத்து சென்றிருக்க வேண்டியதில்லை.

எங்களது அணுகுமுறை காரணமாக 4 மற்றும் 5 எதிரிகளுக்கான ரேட்டிங்ஸ் குறைந்தது என்றால் சரியல்ல. எங்கள் சேவை குறைபாடு காரணமாக 4 மற்றும் 5 எதிரிகள் தனியாக ஒரு நிறுவனத்தை தொடங்கினார்கள் என்றால் அப்படி இருந்திருந்தால் அவர்கள் வெளிநபர்களை வைத்து ஆரம்பித்திருக்க வேண்டும். எங்களது ஊழியர்களை வைத்து ஆரம்பித்திருக்க கூடாது. 7ம் எதிரிக்கு அனுபவ சான்று நாங்கள் கொடுத்திருந்தால் அவர் லெகசி நிறுவனத்திலே பணியாற்றியிருப்பார் என்றாலும் நான் அனுபவ சான்று கொடுக்காததால் அங்கு அவரால் பணியாற்ற முடியவில்லை என்றால் சரியல்ல. அது அவர்களது முன்னேற்பாடு. அவருக்கு அனுபவ சான்று நான் வழங்காததால்தான் எதிரியின் நிறுவனத்தில் வேலைக்கு சேர நேர்ந்தது என்றால் சரியல்ல. அங்கு வேலை செய்ய வேண்டும் என்பதற்காகதான் எங்கள் அலுவலகத்தையே விட்டு சென்றார். 7ம் எதிரியின் பணி அவுட்சோர்சிங் பணி என்பதால் அவரால் கிளைண்டுகளை நேரடியாக தொடர்பு கொள்ள முடியாது என்றால் அவரால் தொடர்பு கொள்ள முடியும். அதற்கு ஆப்ஷன்ஸ் கொடுத்துள்ளோம். புகார் கொடுத்த காலகட்டத்தில் 7 ம் எதிரி எங்கள் நிறுவனத்தில் இல்லாததால் வழக்கு மூலம் 7ம் எதிரி மீது இல்லை என்றால் சரியல்ல. நாங்கள் ஏப்ரல் மாதத்தில் டேட்டாவை எடுத்துள்ளதை கண்டுபிடித்தோம். அதற்கு முன்னதாவே எடுக்கப்பட்ட டேட்டாவை தொடர்ந்து ஏப்ரல் மாதத்தில் கண்டுபிடித்தோம் என்றுதான் புகார் அளித்துள்ளோம். 7ம் எதிரி எங்கள் நிறுவனத்தில் கிளரிக்கல் வேலைதான் செய்துவந்தார் என்றால் இல்லை. அவர் கிளரிக்கல் வேலை செய்ததால்தான் அவரது சொந்த கைபேசி நிறுவத்திற்குள் எடுத்து செல்ல அனுமதிக்கவில்லை என்றால் மேலாளருக்கு மேற்பட்ட பொறுப்பு இருக்கும் நபர்களுக்குதான் அலுவலகத்திற்குள் கைபேசி எடுத்து வர அனுமதிக்கப்படுகிறது.

இந்த வழக்கில் எங்கள் நிறுவனத்தின் ஐடி டீம் சார்ந்த நபர்களை குற்றவாளியாக சேர்த்துள்ளோமா என்றால் இல்லை. எங்களது துறையானது கணினியை சார்ந்தது என்பதால் தினந்தோறும் ஐடி டீம் மூலமாக அதை கண்காணித்து வருகிறோம் என்றாலும் 7ம் எதிரியை பழிவாங்க வேண்டும் என்பதற்காக நான் இந்த வழக்கை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. இது தொடர்பாக அமெரிக்காவில் வழக்கு தொடர்ந்துள்ளோமா என்றால் இல்லை. இங்க சம்பவம் நடந்ததால் இங்குதான் வழக்கு பதியவேண்டும். கிளைண்டுகளைப்பற்றியும் மருத்துவர்களைப்பற்றியும் விபரங்களை

வெளியிடக்கூடாது என்பதற்காக அமெரிக்காவில் ஒரு சட்டம் உள்ளது என்றால் சரிதான். டேட்டா வெளியிட்டது தொடர்பாக புகாரை நான் அதனால் அமெரிக்காவில் கொடுத்திருக்க வேண்டும் என்றால் சரியல்ல. எனக்கு அமெரிக்காவில் முறையான அலுவலகம் இல்லாததால் இங்கு நான் வழக்கு தொடர்ந்துள்ளேன் என்றால் அமெரிக்காவிலும் எங்களுக்கு அலுவலகம் உள்ளது. standard operating procedure என்பது பொதுவான ஒன்று என்றாலும் அதை மறைக்க வேண்டிய அவசியம் இல்லை என்றாலும் சரியல்ல. அந்த டேட்டாக்கள் கூகுலை தேடினாலே கிடைக்கக்கூடியது என்றால் எதிரிகள் எடுத்த டேட்டாக்கள் கூகுளில் கிடைக்கக்கூடியது அல்ல. Go to app and doctors app நாங்கள் பயன்படுத்துகிறோமா என்றால் அவ்வாறு ஒரு ஆப் இல்லை. 7ம் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் தொடர்பில்லை என்றால் சரியல்ல. 7ம் எதிரியை பழிவாங்கவேண்டும் என்பதற்காக இந்த வழக்கில் 7ம் எதிரியை இணைத்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

Sdx/–Tmt.M.Amudha
Judicial Magistrate No.I
Poonamallee